☎ 2851 65 65
2851 65 66
2854 98 84



மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

"தாயகம்"

எண் : 12, ருக்மணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை – 600 008.

வைகோ
பொதுச்செயலாளர்

27 ஆகஸ்ட் 2011

# கொடுவிலார்பட்டி கோமேதகம் பொன்முடி;

# புகழ்முடி தரிக்க வாழ்த்துகிறேன்!

**வா**ழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கி, தான் வாழ்வதோடு, பிறருக்கும் அதைக் கற்பிக்கும் கருத்துச் சுரங்கமாக விளங்கி வரும் '**கொடுவிலார்பட்டி கோமேதகம்**' ஆருயிர்த்தம்பி பொன்முடி அவர்களின் சிந்தனைக் கூர்மையில் விளைந்து இருக்கின்ற '**பசியின் நிறம் வெள்ளை**' எனும் நூலின் அறிமுக விழாவை, தேனி தென்தேன் தமிழ்ச் சங்கம் நடத்தும் செய்தி அறிந்து மகிழ்கிறேன்.

வருமானம் ஈட்டும் கல்வியை மட்டுமே ஊட்டி, சமூக நலன் குறித்த அவசியத்தை இளைஞர்களின் இதயத்தில் இருந்து அகற்றுகின்ற பேராபத்து நாட்டைச் சூழ்ந்து இருக்கின்ற நிலையில், இளவல் பொன்முடியின் நூல், சமூகச் சிந்தனையாளர்களின் மனக் காயங்களுக்கு மருந்தாக அமைந்து இருக்கின்றது.

இளமைப் பருவந்தொட்டு இன்றுவரையிலும், அறிவுத்தேடல் ஒன்றையே இலட்சியமாகக் கொண்டும், பிறந்த பொன்னாட்டுக்குப் புகழ்சேர்த்தே தீரவேண்டும் என்ற துடிப்போடும் பொன்முடி பொதுப்பணி ஆற்றி வருவதை நான் அறிவேன். அதனால்தான், அவரை கொடுவிலார்பட்டி மக்கள், தங்களுடைய ஊராட்சி மன்றத் தலைவராக ஆக்கி அழகுபார்த்தார்கள்.

'பெற்றிருக்கும் நட்பைவிட, வகிக்கின்ற பதவிகளைவிட, கிடைக்கின்ற புகழ்மாலைகளை விட ஒரு படி உயரத்தில் இருப்பது, புத்தகங்களை வாசிக்கின்றபோது கிடைக்கிற சுகம்தான்' என்று பொன்முடி தனது முன்னுரையில் தெரிவித்து இருப்பதில் இருந்தே, அவரது நுண்மான் நுழைபுலத்தையும், ஆழ்ந்த அறிவாற்றலையும் ஒருசேர உள்ளடக்கியதாக இந்த நூல் அமைந்திருக்கும் என, நூலுக்குள் நுழைவதற்கு முன்னரே நாம் அறிந்து கொள்ள முடியும்.

'பசியின் நிறம் வெள்ளை' நூலின் கட்டுரைத் தலைப்புகள் ஒவ்வொன்றிலும், கவித்துவம் மிளிர்கின்றது.

...2...

இன்றைக்கு உலகமெங்கும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி இருக்கின்ற சுற்றுப்புறச் சூழல் குறித்த அக்கறையைத் தம் நூலில் வலியுறுத்துகின்றார் பொன்முடி.

மழைக்குக் காடுகள் வேண்டும்; காடுகளுக்குப் பறவைகள் வேண்டும், பூச்சிகள், விலங்குகள், புற்கள் என எல்லா உயிர்களும் வேண்டும்;

இயற்கையை அழிப்பது என்பது கொள்ளிக் கட்டை கொண்டு தலையைச் சொறிவது போலாகும்;

மனிதர்களின் கண்ணீர்த் துளிகள் காணாமல் போக வேண்டுமெனில் மழைத்துளிகள் இந்த மண்ணுக்கு வேண்டும் என வலியுறுத்துவதுடன்,

உலகம் வெப்ப மயமாதலின் விளைவால், அமைதியான நதி, பச்சைப் போர்வை போர்த்திய மலைத் தொடர்கள், ஏன் கைகுலுக்கிச் செல்லும் கடல் அலைகளைக் கூடக் காணும் பேறு, எதிர்காலத் தலைமுறைக்கு இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சத்தையும் வெளிப்படுத்துகின்றார்.

மக்களுக்கு மட்டுமல்ல, தேவர்கட்கும் அறம் ஒன்று இருக்குமானால், அது பசிப்பிணி நீக்குவதாகவே இருக்க முடியும் என்று புத்தமதம் கூறுவதையும்;

இஸ்லாத்தின் அடிப்படை ஐந்து கடமைகளுள் ஒன்றாக ஈகைக் குணம் இருப்பதையும்;

கிழக்கில் ஹரி வாழ்கின்றார், மேற்கில் அல்லா வசிக்கின்றார்; அதற்கும் சற்று தள்ளி ஏசு பரிபாலிக்கின்றார் என்று குருநானக் கூறியதையும் உள்ளடக்கித் தம் கருத்துகளை உரைக்கின்றார்.

நமக்கென்று சுய விருப்பு, வெறுப்புகளை, கொள்கைகளை உருவாக்கிக் கொள்ள, பிரமாண்டமான விளம்பர யுக்திகள் அனுமதிப்பதில்லையே என்ற அவரது வேதனை நியாயமானதே. இளைய தலைமுறையினரின் சிந்திக்கும் ஆற்றலையே மழுங்கடித்து விடுகின்றது விளம்பரங்கள்.

மக்களின் அறியாமையையும், வறுமையையும் பயன்படுத்தி, இலவசங்களால் அவர்களின் நெற்றிப் பொட்டில் அறைகின்ற அரசுகள், வாக்குகளால் விரட்டப்பட வேண்டும் என்று தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்தி இருக்கின்றார். அதை, கடந்த தேர்தலில் தமிழக மக்கள் செய்து காட்டினர். எனவே, எதிர்காலத்தில் ஜனநாயகம் தழைக்கும் என்ற நம்பிக்கை துளிர்க்கின்றது.

மக்கள் ஆட்சியை மேலும் வலிமைப்படுத்திட செழுமையாக்கிட, மக்கள் வாழ்வை உயர்த்திடத் துறைதோறும் புதிய கருத்துகள் ஊறிட வேண்டும். அதற்கு ஏற்ற வகையில், நாம் வாழும் நிலப்பகுதி, நம் முன்னோர் பற்றி அறிதல், நம்முடைய தொன்மம், நமது போராட்டக்குணம்,

நமது வீரம், நமது தியாகம் ஆகியவற்றை அறிந்து கொள்வதே நம்மைப் பற்றிய மதிப்பீடுகளை உயர்த்தும் என வலியுறுத்தி, இந்த நூல் முழுமையும் பொக்கிசமான செய்திகளை அள்ளித் தந்து இருக்கிறார்.

நிச்சயமாகப் பன்னூறு நூல்களைப் படித்து இருந்தால்தான் இப்படிப்பட்ட ஒரு நூலைப் படைக்க முடியும்.

திராவிட இயக்கத்தின் கொள்கைப் பறை ஒலிக்கும் மறுமலர்ச்சி தி.மு.க. எனும் எங்கள் இயக்கத்தின் அறிவார்ந்த தம்பிமார் படைதனில் அணிவகுக்கும் ஆருயிர்த்தம்பி பொன்முடி, பிரபஞ்சன், நாஞ்சில் நாடன் போன்ற தகைசான்ற பெருமக்களின் நன்மதிப்பையும் பெற்று இருப்பது கண்டு புளகாங்கிதம் அடைகின்றேன்.

கூர்ந்த மதிநுட்பமும், தமிழ்ச் சமூகத்தின் உயர்வு குறித்த நோக்கமும், எழுத்துத் துறையில் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பும் கொண்ட தம்பி பொன்முடி, பல புகழ் முடிகள் தரித்து அறிவுலகுக்குப் பெருமை சேர்த்திட வாழ்த்துகிறேன்!

**பாசமுடன்**

**(வைகோ)**
பொதுச் செயலாளர்
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

**தாயகம்**
சென்னை - 8
27.08.2011